Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ரூ. 1-25

ஏடு: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 20 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 9 (05 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 215

உ
சிவமயம்
எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள், பிரதியாக்கம் செய்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்
New Konica S.R - V 100
வர்ண நிழற்படச்சுருள்கள்
★ இலவசம் ★
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:-
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ போராட்டத்துக்கு ஒப்பந்தம் ஆப்பு

★ இந்தியாவுடன் மோதும் நிலையை விரும்பவில்லை

★ தமிழீழம் மட்டுமே நிரந்தரத் தீர்வு

★ எமது போராட்ட இலட்சியம் மாறாது

★ முதலமைச்சர் பதவியை நான் ஏற்கமாட்டேன்

★ தேர்தலில் புலிகள் போட்டியிடக்கூடும்

# ஆயுதங்களை இந்தியாவிடம் வழங்குவோம்

# இனி அவர்களிடமே தமிழரின் பாதுகாப்பு

## பிரபா நேற்று அறிவிப்பு

— க. இரத்தினராஜசிங்கம், சண். ஜோண்சன் எம். பேரின்பநாயகம் —

சுதுமலை அரங்கிலிருந்து, ஆக. 5

தமிழீழம் மட்டுமே தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வாக முடியும். ஆனால், இலங்கை-இந்திய ஒப்பந்தம் எமது போராட்டத்துக்கு ஆப்பு வைப்பதாக உள்ளது.

ஆனால், நாம் இந்தியாவுடன் போராடும் நிலையை விரும்பவில்லை. அதனால் எம்வசம் உள்ள ஆயுதங்களை இந்தியத் துருப்புகளிடம் கையளிப்போம். ஈழத் தமிழர் ஒவ்வொருவரினதும் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்திய அரசுதான் இனிப் பொறுப்பாக இருக்க வேண்டும். எமது எதிரியிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் சுதுமலை அம்மன் கோவிலடியில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்.

நேற்று மாலை நடைபெற்ற இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க கூட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

திரு. பிரபாகரன் தமது உரையில் தெரிவித்ததாவது:—

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று எமது விடுதலைப் போராட்டவரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. திடீரென எமக்கு அதிர்ச்சியூட்டுவதுபோல —எமது சக்திக்கு அப்பாற்பட்டது போல — இந்தத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இதன் விளைவுகள் எமக்கு சாதகமாக அமையுமா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

திடீரென மிகவும் அவசரமாக - எமது மக்களையோ எமது மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மையோ கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவும், இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தம் இப்பொழுது அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நான் டில்லி செல்லும் வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. பாரதப் பிரதமர் என்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி என்னை டில்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள்.

அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்கு காண்பிக்கப்பட்டது.

### பல சிக்கல்கள்

இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. பல கேள்விக் குறிகள் இருந்தன. இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படுமா என்பது பற்றி எமக்கு சந்தேகம் எழுந்தது.

ஆகவே இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை இந்திய அரசிற்கு தெட்டத் தெளிவாக விளக்கினோம்.

ஆனால் நாம் ஏற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)



வீரமரணமடைந்த வேங்கைகளுக்கும் மறைந்த பொதுமக்களுக்கும் நேற்றைய கூட்ட ஆரம்பத்தில் இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்திய போது பிடிக்கப்பட்ட படம். மேடையில் புலிகள் பிரமுகர்கள் நிற்கின்றனர். (படம்: ஜெயம்)



மெய்ப்பாதுகாவலர்கள் சூழ நிற்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நேற்று தமிழ் மக்களுக்கு உரையாற்றியபோது பிடிக்கப்பட்ட படம். (படம்; ஜெயம்)

## எம் இலட்சியத்துக்கு முரணற்ற முடிவு!

### கிட்டுவின் உரை

யாழ்ப்பாணம், ஆக. 5

எமதுமுடிவு எம் இலட்சியத்துக்கு முரணற்றது என்றே நாம் நம்புகிறோம்.

—இப்படி விடுதலைப் புலிகளின்பிரமுகர் கிட்டு நேற்றைய கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.

எமது போராட்டம் இரண்டு இனங்களுக்கிடையேயான போராட்டம் அல்ல.

அது போராட்டம் என்ற நிலையை விட்டு ஒரு சர்வதேச நிலையிலான போராட்டமாக ஆகிவிட்டது.

எனவே சில சர்வதேச நிலைமைகளை உத்தேசித்து சில சர்வதேச அழுத்தங்களின் மூலமாக நாம் போராடி வருகின்ற பாதைகளில் சில நெகிழ்ச்சிப் போக்குகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது.

அத்தகைய சில அழுத்தங்களின் காரணமாக நாங்கள் எடுத்திருக்கும் முடிவு நிச்சயமாக எமது இலட்சியத்துக்கு பாதகமாக அமையமாட்டாது என்பது எமது அபிப்பிராயம்.

நாம் எந்த முடிவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

★

· சுபநேரம்

5-8-1987

புதன்கிழமை

சுபநேரம்:

04.34 முதல் 06.04 வரை

ராகுகாலம்:—

12.04 முதல் 1 34 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

முச்சந்தி முரளி



இனிச் சர்வமுமே இந்தியத் துருப்புக்கள் வசம்தானே.........?

## பொலீஸ் கடமையும் இந்திய துருப்புகளிடம்

யாழ்ப்பாணம், ஆக. 5

தமிழ்ப் பகுதிகளில் இந்தியத் துருப்புகளே பொலீஸார் செய்யும் அலுவல்களையும் தற்காலிகமாகச் செய்வர் என்று அறியப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொலீஸ் சேவையினர் இங்கு இப்போது கடமையில் ஈடுபடமாட்டார்கள் என்று இந்திய இராணுவ வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது.

இரவு ரோந்து, மற்றும் குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியத் துருப்புகளே ஈடுபடுவர் எனவும் அறியவந்தது.

(அ)

## டில்லியில் கடைசியாக நடந்தது என்ன?

### யோகி விவரித்தார்

யாழ்ப்பாணம், ஆக. 5

ஒப்பந்தம் குறித்து எமக்குள்ள குறைபாடுகளை எழுதித் தருமாறு கேட்டுவிட்டு, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை வந்துவிட்டார்,

அவர்கள் எங்களை டில்லிக்கு அழைத்துவிட்டு நாம் சொல்வதைக் கேட்கத் தயாரில்லாத நிலையில் தாம் சொல்வதை நாம் கேட்க வேண்டும் என்று நெருக்குதல் கொடுத்தார்கள்.

இவ்வாறு சுதுமலைக் கூட்டத்தில் பேசிய திரு. யோகி தெரிவித்தார்.

தமிழர் போராட்ட வரலாற்றை ஆதியில் இருந்து சம்பவ ரீதியாக விவரித்த திரு. யோகி ஆகக் கடைசியாகத் திரு. பிரபாகரன் டில்லிக்கு அழைக்கப்பட்ட பின்னர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளி எம். ஜி. ஆர். அமெ பயணம்

சென்னை, ஆக. 5

மருத்துவ சிகிச்சைக்காக தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அமெரிக்கா செல்வார்.

இன்று புதுடில்லி செல்லும் முதலமைச்சர், வெள்ளிக்கிழமை புதுடில்லியில் இருந்து அமெரிக்கா புறப்படுவார்.

(உ-எ)

★

திரண்டு வந்த மக்கள் கூட்டம்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★★

**விற்பனைக்கு**

வட்டுக்கோட்டையில் L. P. காஸ் பெற்றுக்கொள்ள ஸ்ரீ முருகன் அரிசி ஆலை (ப யிமில்) மூளாய் ரோட், வட்டுக்கோட்டை. (1375)

பெண் அல்சேசியன் நாய் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும். க. நரேந்திரன் 'ஹரி வாசம்' தாவடி ரோட், மானிப்பாய். மாலை 2—4 மணிக்கு இடையில் சந்திக்கவும். (1377)

யோகமும் போகமும் குருஜி தவயோகி .S. எழுதியது. உடலும் உள்ளமும் வளம்பெற 61 யோகாசனப் பயிற்சிகள் அடங்கிய அரிய நூல் விலை ரூபா 56/- விற்பனவு பூபாலசிங்கம் புத்தகசாலை நல்லூர் யாழ்ப்பாணம். (3228)

ஆயிஷா றேடர்ஸ் பொலித்தீன், பிளாஸ்டிக், றெக்சின், சொப்பிங்பேக் மொத்த சில்லறை வியாபாரிகள் 174 கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம். (1371)

**தேவை**

இறைச்சிக்குக் கோழி தேவை. இனங்களுக்கு ஏற்ற வகையில் கிலோ முப்பது ரூபாவுக்கு மேற்பட்ட விலையில் பெற்றுக்கொள்ளப்படும். தொடர்பு கொள்ளும் முகவரி: ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (1386)

**வகுப்புகள்**

புதிய கல்விநிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம் ஆண்டு 4 ஆண்டு 11 வரையுள்ள வகுப்புகளுக்கு சகல பாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 6 ஆண்டு 11, வகுப்புகளுக்கு புலமைப் பரிசில் பரீட்சைக்கும் க. பொ. த பரீட்சைக்கும் விசேட வகுப்புகள் 1-8-87 சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன: குறைந்த கட்டணம் நிறைந்த கல்வி. (1372)

**சேவை**

சகல புடைவைத்தினுசுகளுக்கும், சகல அளவிலான – டிசைன்களிலான சவுன்களுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், அன்பளிப்பு அலங்காரப் பொருட்களுக்கும் பாவனைகளுக்கும் பிறந்த தின திருமண மற்றும் வைபவங்களுக்குமான வாழ்த்துமடல்களுக்கும், நீங்கள் கொடுக்கும் துணிகளை அன்றே தைத்துப் பெற்றிடவும் – மியாமி காமென்ஸ், 40, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (1385)

கஜேந்திராஸ் சைக்கிள் வேக்ஸ் - எமது நிலையத்தில் சைக்கிள் திருத்துவதற்காக அண்மைக்காலத்தில் அதிகரிக்கப்பட்ட கூலி மீண்டும் வழமைக்குத் திரும்பி விட்டது. உங்கள் பழைய சைக்கிள்களை பெயின்றிங் செய்யவும் திருத்திக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்.

கஜேந்திராஸ் சைக்கிள் வேக்ஸ், அம்பிகா ஸ்ரோர்ஸ், கட்டிடம், சைவப்பிரகாச வித்தியாசாலை, (அருகாமை) வேலணை 5. (1368)

தரமான போட்டோ ஸ்டட் (Photostat) பிரதிகளுக்கு கிவீ போட்டோ 380, ஆஸ்பத்திரி வீதி (ஸ்ரேசன் சந்தி) யாழ்ப்பாணம். (1361)


★ கிளிநொச்சிப் பகுதி

# போராளிகளைச் சந்திக்க இணைப்பதிகாரி தயார்

## ஆயுதம் ஒப்படைப்பு பற்றி மாநாட்டில் அவரே தகவல்

கிளிநொச்சி, ஆக. 5

போராளிகள் விரும்பும் இடத்துக்கு நிராயுதபாணியாகச் சென்று அவர்களைச் சந்திக்க ஆவலாக உள்ளேன்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் ரொமுணு குலதுங்கா தெரிவித்தார்.

போராளிகள் ஆயுதங்களை ஒப்படைப்பது சம்பந்தமான மாநாடு ஒன்று கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி இராணுவ இணைப்பதிகாரியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. கே. தேவசிகாமணி தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் இணைப்பதிகாரி தொடர்ந்து தெரிவித்தாவது:–

இலங்கையின் சமரசத் தீர்வுக்கான இலங்கை – இந்திய உடன்படிக்கையின்பின் பயங்கரவாதிகள் என்ற நிலையில் கருதாது போராளிகள் என்ற நிலையிலேயே நான் அவர்களை மதிக்கின்றேன். ஆகவே அவர்களுடன் கலந்து உரையாட மிகவும் ஆவலாக உள்ளேன்.

போராளிகள் என்னை எங்கு அழைத்தாலும் நான் நிராயுதபாணியாகச் சென்று அவர்களுடன் அளவளாவிக் குரோதங்களை விலக்கிக் கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

இம்மாநாட்டின்போது கிளிநொச்சி பிரசைகள் குழுவின் உறுப்பினர்கள் சிலரும் சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை கிளிநொச்சி, இயக்கச்சி, பூநகரி ஆகிய இடங்களில் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக நியமிக்கப்பட்ட இடங்களில் பிரசைகள் குழு உறுப்பினர்களையும் சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் திரு கே. தேவசிகாமணி கேட்டுள்ளார்.

ஆயுதங்களைப் பொறுப்பேற்பதாக கிளிநொச்சிக் கச்சேரியில் அரசாங்க அதிபர் கே. தேவசிகாமணி தலைமையிலான குழுவும், இயக்கச்சியில் கிளிநொச்சிக் கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா தலைமையிலான குழுவும் பூநகரியில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஆளணி உதவியாளர் திரு கே. தங்கராசா தலைமையிலான குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன. (இ-76)

### வழிமறிப்பு

சனி கிழமை கோப்பாய் சந்தியில் வழிமறிப்புப் போராட்டம் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் இதில் கலந்துகொண்டனர். இந்திய இராணுவ அதிகாரிகள் இங்கு வருவார்களென எதிர்பார்க்கப்பட்டது.

அவர்கள் வராததினால் மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (இ-ரி)

வீடமைப்புத் திட்டத்தின்கீழ்

## அனலைதீவிலும் வீடுகள்

ஊர்காவற்றுறை, ஆக. 5

யாழ்மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படவிருக்கும் வீடமைப்புத்திட்டத்தின் படி இவ்வருடம் அனலைதீவிலும் சில வீடுகள் கட்டப்பட உள்ளன.

அரசாங்கத்தின் சுய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அனலைதீவில் குறைந்தது பத்துவீடுகள் கட்டப்படும் என ஊர்காவற்றுறைப் பகுதிக்கான வீடமைப்பு அதிகாரி திரு. எம். செல்வராசா 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

போக்குவரத்து வசதிகள் குறைந்துள்ள தீவுப் பகுதியில் வீடமைப்புத் திட்டத்திற்கு செலவுகள் அதிகமாகும் என எதிர்பார்க்கப்பட்டாலும் அதற்குரிய மேலதிக செலவுகளை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கும் எனவும் அவர் கூறினார். (இ-16)

### நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக 5

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் கதாப்பிரசங்கத் தொடரில் இன்று புதன்கிழமை இராமாவதாரம் என்னும்பொருளில் சொற்பொழிவு இடம்பெறும்.

நல்லைக் குருமணியின் பிரதம சீடன் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

நல்லூர் மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோவில் மண்டபத்தில் தினமும் மாலை 6 மணிக்கு இந்த கதாப்பிரசங்கம் நடைபெற்று வருகிறது (இ-7)


07.08.87 வெள்ளிக்கிழமை தொடக்கம்
✶ மீண்டும் பழைய விலாசத்தில் ✶

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனதிகள், ஆயுள்வேத மருந்துகள் தயாரிப்பாளரும் விற்பனையாளரும்)
53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்:-
34, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
(3230)

**DIPLOMA COURSES IN**
NURSING AND PHARMACY
தாதிப்பயிற்சி நெறியில் டிப்புளோமா 7 ஆம் பிரிவு
பாமஸி பயிற்சி நெறியில் டிப்புளோமா 4 ஆம் பிரிவு
● அரசாங்கப் பாடத் திட்டம்
● வெளிநாட்டு உள்நாட்டு வேலைவாய்ப்பும், உயர்கல்வியும்
● பாடத்திட்டத்திற்கேற்ப இலவச ஆங்கில வகுப்புக்கள்
சூழ்நிலை காரணமாக வகுப்புக்கள் 8 ஆம் திகதி ஆரம்பமாகின்றன
ஆரம்பம் 8th. AUG. 1987
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, st. PETERS LANE,
JAFFNA. (3223)


காரைநகரில்

## புலிகள் சென்றி நோக்கி வந்த கடற்படையினர்

காரைநகர், ஆக. 4

சனிக்கிழமை மாலை 4-15 மணி அளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து உயர் அதிகாரி உட்பட ஆறு பேர் வெள்ளைக் கொடியுடன் புலிகளின் சென்றிக்கு வந்தனர்.

புலிகளுடன், இனி எமக்கு சமாதானம் ஆதலால் ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி உங்கள் கருத்து என்ன என்று அவர்கள் கேட்டனர்

நங்கள் தலைவர் வரும் வரை ஆயுதங்களைக் கீழே போடமாட்டோம் என்று சென்றியில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

கடற்படையினர் சிரித்தபடியே முகாம் திரும்பினர் (இ 73)

## படைப்பு ஆர்வத்தை மொழி உணர்வு வளர்க்கிறது

மானிப்பாய் ஆக. 5

" அழகுணர் இன்பமும் கலைவடிவங்களும் இணையும் பொழுது வாழ்க்கையில்புதுமை உணர்வு வளர்கிறது. இளைஞர்கள் சிந்திக்கும் ஆற்றலையும், கற்பனைத்திறனையும் படைப்பு ஆர்வத்தையும் மொழி உணர்வும் வளரும் கவின் கலைகளும் வளர்க்கின்றன.

இணுவில் பொது நூலக சனசமூக நிலைய ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் திரு. ப. சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் ஸ்ரீ பரராசசேகர பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் பொதுநூலகத்தின் ஓராண்டு நிறைவு விழாக் கொண்டாடப்பட்டது.

திரு. சி. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை பேராசிரியர் திரு. சபா ஜெயராசா, திரு. எஸ் பி நடராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

செயலாளர் திரு. செ. ஜெயகுமார் பொருளாளர் திரு இரா. குகவரதன் ஆகியோர் தமது ஆண்டறிக்கைகளை வாசித்தனர்.

பேராசிரியர் திரு, சந்திரசேகரம் தாது பேருரையில் மேலும் கூறியதாவது:–

குழந்தைகளின் அக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கல்விச் சிந்தனை வளர்க்கப்பட வேண்டும் என்றார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா, பண்டிதர் இராசையா, பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், திரு வை. பிரபாகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

வசந்தி சதாசிவத்தின் மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. (இ-90)

### ஏழுபேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

முள்ளியவளை, ஆக 5

கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த நிராவிப்பிட்டி, முறிப்பு, கள்ளப்பாடு ஆகிய இடங்களைச் சேர்ந்த 7 பேரின் குடும்பங்களுக்கு முல்லைத்தீவுப் பிரசைகள் குழு நஷ்டஈடு வழங்கி உள்ளது. (இ-93)

ஸ்ரீலங்கா கடற்படைக் கெடுபிடி நீங்கவில்லை:

## நயினாதீவுமக்கள் அவலம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஆக 5

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவந்த அச்சுறுத்தல்களும் அவலங்களும் தற்போதைய ஒப்பந்தம் காரணமாக நீங்கிவரும் இவ்வேளையில், நயினாதீவு. நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களின் பயமும் பதற்றமும் இன்னும் நீங்கியபாடில்லை – குறிப்பாக நயினாதீவு மக்கள் பீதியுடனேயே வாழ்கின்றனர்.

நயினாதீவில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா கடற்படையினர் ஆயுதபாணிகளாக ஊருக்குள்ளே திரிவதும், நயினாதீவு புத்தகோயில் இறங்குதுறையில், நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவுப் பிரயாணப் படகுகளைத் தீவிர பரிசோதனைக்குள்ளாக்குவதும் பொதுமக்களுக்குப் பெரும்பாதிப்பை உண்டாக்கியுள்ளது.

கொழும்பு சென்று திரும்பும் பிரயாணிகள் கூட எந்த முகாமிலும் சோதனை இடப்படாமல் இருக்கும்போது, தனிமைப்படுத்தப்பட்ட நயினாதீவில் மட்டும் இப்படி நடப்பது ஏன்? என்று மக்கள் கேட்கின்றனர்.

இதுதொடர்பாக இந்தியச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி சௌத்திரியை நயினாதீவுப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. கே. வி. பரமலிங்கம் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது யாழ்ப்பணச் செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியமும் உடனிருந்தார்.

தீவுப்பகுதிப் போக்குவரத்துவசதிகள் 1983க்கு முன் இருந்ததுபோல வழமைக்குத் திரும்ப வேண்டியதற்கான ஆலோசனைகளும் இச்சந்திப்பின்போது இடம்பெற்றன. (இ)

மோசமான நிலையில் உள்ள

## நவாலி—சங்கரத்தை வீதியைத் திருத்தக் கோரிக்கை

வட்டுக்கோட்டை, ஆக. 5

பொதுமக்கள் வாகனங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாத வகையில் நவாலி சங்கரத்தை வீதி மிக மோசமான நிலையில் உள்ளது

இந்த வீதியில் இடையிடையே பாரிய குழிகள் காணப்படுகின்றன.

இதனால் இந்த வீதியால் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

பிரயாணிகளின் நலன் கருதி வீதியை உடனடியாகத் திருத்துமாறு நவாலி மேற்கு சனசமூக நிலையச் செயலாளர் திரு. இரா. வன்னியசேகரம் பெருந்தெருக்கள் திணைக்களத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டை மூளாய், சித்தன்கேணி, சுழிபுரம் [illegible], பிளவத்தை, சிவன்கோவிலடி, தொல்புரம் பகுதி மக்கள் அதிகமாக இந்தவீதியாலேயே [illegible] கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (இ-[illegible])

### வயிற்றோட்டம்: சிறுவன் மரணம்

கொடிகாமம், ஆக. 5

8வயதுச் சிறுவன் ஒருவன் வயிற்றோட்ட நோயால்மரணமானான்.

கொடிகாமத்தில் அகதியாக இருந்து நெல்லியடி சென்று இருந்[illegible] ளில் மரணம் சம்பவித்[illegible] (இ-[illegible]-70)

### ஒத்துழைப்பு

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவுமுத்திரை வழங்கும் வேலை ஊழியர்களின் ஒத்துழைப்பினால் மிக விரைவாக முடிவடைந்தது என சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் [illegible] சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (இ-ரி)


விளம்பர இல: 7

**கேள்வி அறிவித்தல்**

**யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையால் 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்17ஆம் திகதி [17 8 1987] காலை 9.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகளுக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலைகள் செய்வதற்குத் தகுதியுடைய, கல்வித்திணைக்களம், கட்டிடத்திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் போன்ற ஏதாவது ஒரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள, ஒப்பந்தகாரர்களுக்கு 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி பி.ப. 2 00 மணிவரை (14 08 1987) மீளளிக்கப் படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 50/- ம் (ஐம்பது) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 250/- (இருநூற்றி ஐம்பது) செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைத் தலைமை அலுவலகத்தில் [கச்சேரி] வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம், கேள்வி வைப்புப்பணம் ஆகியன செயலாளர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை என எழுதப்பட்ட காசுக்கட்டளை அல்லது வங்கிக்கட்டளை மூலம் செலுத்தப்பட வேண்டும்.

கேள்விகள் 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி (17 08. 1987) முற்பகல்10 மணிக்கு யாழ் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப் படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அபிவிருத்திச்சபை அலுவலகம், செயலகம், யாழ்ப்பாணம்.
1987. 07. 28.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

| பாடசாலையின் பெயர் | விபரம் | பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை. |
|---|---|---|
| 01. யாழ் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை | பாடசாலைக்கட்டிடம் 60' . 0''× 20' . 0'' | 175, 000. 00 |
| 02. யா/றிபேர்க் கல்லூரி | மேல்மாடி.–படி11 48' . 9''×25' . 0'' | 175, 000. 00 |
| 03. யா/ நாவற்குளி ம.வி | மேல்மாடி படி. 11 48' . 9''×25' . 0'' | 175, 000. 00 |
| 04. யா/ சென்மேரி றோ. க. த. க. பாடசாலை | மேல்மாடி–படி 11 40' . 0''×25' . 0'' | 125, 000. 00 |
| 05. யா/ கொழும்புத்துறை சென்ஜோசப் றோ க.த.க. பாடசாலை | மேல்மாடி–படி.1 68' . 9''×25' . 0'' | 275, 000. 00 |
| 06 யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | பாடசாலைக்கட்டிடம் 40' . 0''×20' .0'' | 125, 000. 00 |
| 07. யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் | மேல்மாடி –படி. 11 68' .9''×25' . 0'' | 225, 000. 00 |
| 08. யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி | மேல்மாடி - படி.11 48' .9''×25' . 0'' | 200, 000. 00 |
| 09 யா/ புத்தளை ம. வி | விஞ்ஞான ஆய்வுகூடம் | 350, 000. 00 |
| 10 யா/ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை | மேல்மாடி –படி 1 50' . 0''×25' . 0'' | 175, 000 00 |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அழகிய பெண்ணுருவத்தைக் கண்டு மனம் தடுமாறினால் உடனே அசோக மரத்தடியில் தவமிருந்த சீதாதேவியைத் தியானித்துக் கொள்.

— ராமகிருஷ்ண பரமஹம்சர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
05.8.1987 த.பெ.இல: - 23

## வெட்கித் தலைகுனியட்டும்!

சுமார் ஒரு வார காலமாக நடந்த கலவரங்கள், குழப்பங்கள், அழிப்புச் சம்பவங்களின் பின்னர், தென்னிலங்கை அனேகமாக வழமைக்குத் திரும்பி இருக்கிறது.

அரசாங்கத்துக்கு விரோதமான சக்திகள், காடையர்களைத் தூண்டிவிட்டு இந்த அனர்த்தங்களைச் செய்வித்தன. இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை ஆட்சேபித்தே இந்தக் குழப்பங்கள் தூண்டிவிடப்பட்டன.

இந்தக் கலவரங்களால் கோடானு கோடி ரூபா பெறுமதியான பொதுச் சொத்துக்கள் துவம்சம் செய்யப்பட்டிருக்கின்றன.

இனக் கலவரங்கள், உயிர் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தல், பொதுச் சொத்துக்களை அழித்தல் ஆகிய தீய செயல்களும், சம்பவங்களும் இலங்கைக்குச் சாபக்கேடாகக் கிடைத்த வரங்களாகவே தென்படுகின்றன.

இராமாயண காலத்தில் அனுமன் இலங்கைக்குத் தீ மூட்டியதாகச் சொல்லப்படுவதில் ஆரம்பித்து, இன்றுவரை அழிப்பும் ஒழிப்பும் இந்நாட்டில் தொடர்கின்றன.

அண்மைக் காலமாக 1958 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான குழப்பங்கள், கலவரங்கள் பலவற்றுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது தமிழர் விரோதம். இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் சட்டபூர்வமான உரிமைகளை வழங்கக்கூடாது. அப்படி வழங்கினால் சிங்களவர்களுக்கென ஒரு நாடு இல்லாமற் போய்விடும் என்பது சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட நஷவித்து.

தமிழர்களுக்குச் சேரவேண்டிய சட்டபூர்வமான சலுகைகள் சிலவற்றைத் தானும் வழங்க முனையும்போது, முயலும் போதெல்லாம் கலவரங்கள் தூண்டிவிடப்படுகின்றன. காலத்துக்குக் காலம் வெவ்வேறு அரசியற் சக்திகள் இவற்றைச் செய்வித்திருக்கின்றன.

முந்திய வருடங்களில் தமிழர்களின் சொத்துக்கள், உயிர்கள் சூறையாடப்பட்டன. 1983 இல் தமிழர்களோடு நில்லாமல் அரசாங்கச் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

1983 இல் அரசாங்கச் சொத்துக்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதங்களைவிட, இம்முறை பலமடங்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. பஸ், ரயில் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள், தொலைபேசிச் சேவை, மின்சார சேவை போன்ற அத்தியாவசிய சேவைகளும் பல தொழிற்சாலைகளும் மீண்டும் இயங்க முடியாத அளவுக்குச் சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சொத்துக்கள் ஆட்சியில் உள்ளவர்களின் சொந்தச் சொத்துக்கள் என்ற முட்டாள் தனமான எண்ணத்துடன், அவர்களுக்கு எதிரான உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்காக, வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் அழிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் அளவுக்கு சிங்கள இனவெறியும், தமிழர் துவேசமும் தென்னிலங்கையில் வளர்த்து விடப்பட்டுள்ளன.

அதனாலேயே சகோதரர்கள் போல வாழ்ந்த தமிழர்களும் சிங்களவர்களும் அடிபட்டுச்சாகும் நிலை உருவாகியது. எண்ணிக்கையில் அதிகமானவர்கள் என்ற இறுமாப்பில் தமிழர்களை அழித்து அவர்களை உரிமைகளே இல்லாத அடிமைகளாக்க நினைத்தார்கள்.

அந்த ஆணவத்தாலும், அடிமை கொள்ளும் வெறியினாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேறு நாடு ஒன்றின் உதவியை நாடவேண்டிய வெட்கக் கேடான நிலைமை உண்டாயிற்று.

சொந்தக் குடும்பச் சண்டையை, ஊர் உலகுக்கு எல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டியதாயிற்று

இத்தனைக்கும் பொறுப்பு சிங்கள மக்களின் தமிழர் விரோதப் போக்கே ஆகும். தமது அறியாமையை நினைத்து வெட்கித்தலை குனிய வேண்டியவர்கள் சிங்கள அரசியல்வாதிகளும், அவர்களை நம்பிப் பின்தொடர்ந்த சிங்கள மக்களுமே ஆவர்.

தமிழர்கள் பாதிக்கப்பட்டவர்கள். தமது குறைகளை உள்நாட்டு மட்டத்தில் தீர்க்க முடியாத ஒரு கட்டத்தில் இந்தியாவினதும், உலகத்தினதும் உதவியை நாடினார்கள். ஆகையினால் அவர்களைக் குறை கூற இயலாது.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கக் கூடிய சகல வாய்ப்பு வசதிகளும் தம்மிடம் இருந்தும், இனவெறியால் கண்மூடுண்ட நிலையில், இன விவகாரத்தைத் தமது கையில் இருந்து நழுவ விட்ட சிங்கள மக்களும் அவர்களின் தலைவர்களுமே நிச்சயம் வெட்கித் தலை குனிய வேண்டியவர்கள்.

மெலியாரை வலியார் வருத்தின், வலியாரைத் தெய்வம் வருத்தும் என்பதை மறந்து நடந்ததினால் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தை இந்தியா வசம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று என்பதை இப்போதாவது உணரட்டும்.

# ஒத்திகை நடக்கும் பகுதிக்குள் நுழைய வேண்டாம்

## வெளிநாட்டுக் கப்பல்களுக்கு ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான், ஆக. 4

கடற்படை ஒத்திகை நடக்கும் பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாம் என்று வெளிநாட்டுக் கப்பல்களுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

ஈரானின் மூன்று நாள் கடற்படை ஒத்திகை திங்கள் நள்ளிரவு ஆரம்பமானது.

அதைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடப்பட்டது.

பாரசீக வளைகுடா, ஓமான் வளைகுடா ஆகிய பகுதிகளில் உள்ள தனது கடற் பிராந்தியத்தில் ஈரான் தனது மூன்று நாள் ஒத்திகையை நடத்துகின்றது. (இ-எ)

## மக்கா படுகொலைகளுக்கு ஈரானே காரணம்

### அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஆக 4

புனித மக்காவில் இடம்பெற்ற படுகொலைக்குக் காரணம் ஈரான் தான்.

இப்படி அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் அனுசரணையுடன் சவூதி அரேபியா இப்படுகொலையைப் புரிந்தது என்று ஈரான் ஏற்கனவே குற்றம் சுமத்தியது.

இப்படுகொலையில் 250 ஈரானிய யாத்ரீகர்கள் உட்பட 402 பேர் உயிரிழந்தனர்.

ஈரானின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சு நேற்று பதிலளித்தது.

அமைச்சுப் பேச்சாளர் சார்ள்ஸ் ரெட்மான் தெரிவிக்கையில், ஈரானின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. வன்செயல்களை அதிகரித்து அப்பிராந்தியத்தைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் ஈரான் செயல்படுகின்றது—என்று சொன்னார்.

இதனிடையில் மக்கா படுகொலை பற்றிய தனது நிலைப்பாட்டை இஸ்லாமிய நாடுகளுக்கு எடுத்துச்செல்ல ஈரான் ஏழு தூதுக் குழுக்களை அனுப்பி வைத்துள்ளது. (இ-எ)

## பங்களாதேஷில் முஜிபுரை ஒழித்தோர் புதியகட்சிஅமைத்தனர்

டாக்கா, ஆக. 4

பங்களாதேஷில் புதிய அரசியல் கட்சி ஒன்று நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஓய்வுபெற்ற மூன்று இராணுவ உயர் அதிகாரிகள் கூட்டுச் சேர்ந்து புதிய கட்சியை ஸ்தாபித்தனர்.

கட்சிக்கு 'சுதந்திரக் கட்சி' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

1975 இல் வங்கத் தந்தை என்றழைக்கப்பட்ட பங்களாதேஷின் முதலாவது பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை படுகொலை செய்த சதிப் புரட்சியை நடத்தியவர்கள் இந்த மூன்று இராணுவ அதிகாரிகள் ஆவர் என்று அறிவிக்கப்பட்டது.

கட்சியின் நோக்கங்கள் வருமாறு;

★ பொருளாதார, சமூக, அரசியல் சுதந்திரங்களை உறுதிப்படுத்துவது.

★ வெளிநாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பது.

★ இஸ்லாமிய அடிப்படையில் நாட்டை ஆட்சி புரிவது.

புதிய கட்சியின் தலைவராக கேர்ணல் பாரூக் ரஹ்மான் தெரிவுசெய்யப்பட்டார்.

புதிய கட்சி ஆளும் கட்சியையும் ஏனைய எதிர்க் கட்சிகளையும் எதிர்க்கின்றது. (இ-எ)

## ராஜீவின் செயலகம் மறுப்பு

புதுடில்லி, ஆக 4

திரு. வி. பி. சிங்குக்கு துணைப்பிரதமர் பதவி வழங்க பிரதமர் காந்தி முன் வந்தார் என்ற செய்தி தவறு.

இப்படி பிரதமரின் செயலகம் அறிவித்திருக்கின்றது.

நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த திரு. வி. பி. சிங் இந்திரா காங்கிரஸில் இருந்து அண்மையில் வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே. (இ-எ)

## எல்லைக்காந்தி

புதுடில்லி, ஆக 4

98 வயதான எல்லைக் காந்தியின் மயக்க நிலையில் நேற்று சிறிது முன்னேற்றம் காணப்பட்டது.

இதன் காரணமாக அவரை புதுடில்லி மருத்துவமனையில் இருந்து சொந்த ஊரான பெஷாவாருக்கு விமான மூலம் அனுப்பி வைக்கப்படும் திட்டம் கைவிடப்பட்டது.

செவ்வாய்க் கிழமை எல்லைக்காந்தி பெஷாவாருக்கு அனுப்பி வைக்கப்படவிருந்தார். (இ-எ)

**வெளி உலகில்**

## கடல் நாய்களை வேட்டையாடும் சோவியத் கப்பல்கள்

வெலிங்டன், ஆகஸ்ட் 4

அன்ராட்டிக்காவில் கடல்நாய்களை வேட்டையாடும் சோவியத் கப்பல்களுக்கு நியூசிலாந்தின் துறைமுகங்களுக்குள் பிரவேசிக்க அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

இப்படி நியூசிலாந்துப் பிரதமர் டேவிட் லாங்கே அறிவித்திருக்கின்றார்.

கடந்த 6 மாத காலங்களில் சுமார் ஐயாயிரம் கடல்நாய்களை சோவியத் கப்பல்கள் அன்ராட்டிக்கா பிரதேசத்தில் கொன்று விட்டதாக நியூசிலாந்து குற்றம் சாட்டியுள்ளது.

வர்த்தக நோக்கங்களுக்காக சோவியத் கப்பல்கள் இப்படி வேட்டையாடுவதாகவும் நியூசிலாந்து மேலும் குற்றம்சுமத்தியுள்ளது.

இதை மறுத்த சோவியத் அதிகாரிகள் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவே சோவியத் கப்பல்கள் கடல் நாய்களை வேட்டையாடுகின்றன என்று தெரிவித்தனர். (இ-எ)

### தென்மராட்சி கிழக்குப் பகுதி

## அகதிகள் சொந்த இடம் திரும்பினர்

கொடிகாமம், ஆக. 5

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருந்தவர்களில் அனேகமாக முழுப்பேரும் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். அனேகர் தமக்குக் கிடைத்த நிவாரண உதவிகளுடன் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

வீடுவாசல்களை இழந்து, சொத்து இழந்தவர்களுக்கு இந்த நிவாரண உதவிகள் ஓரளவுக்குக் கைகொடுத்து உதவும் என்று கூறப்படுகிறது.

பதிவு செய்த இடங்களில் நிவாரணங்களை முற்றாக இன்னும் பெறாதவர்கள் சிலர் தான் அவற்றைப் பெறுவதில் காலம் கழிக்கின்றனர்.

விடுவாசலைப்பார்ப்பதிலும் நிவாரணமே பெரிதென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும் அரசினர் வித்தியாலயமும் அகதிகளுக்குப்பெருமளவு உதவின.

கொடிகாமத்திலுள்ள சமூகத் தொண்டர்கள் அகதிகளுக்கான வீடுகளை அமைத்து உதவினர்.

முகாம்களைப் பராமரித்தது மட்டுமன்றி அகதிகளை மகிழ்ச்சியாக வழி அனுப்பிவைபதிலும் தொண்டர்கள் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (இ-75)

## ஜெனிவா ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துக

### குடியியல் உரிமைகளுக்கான இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக.5

ஜெனிவா ஒப்பந்தங்களின் வாசகங்கள்,கோட்பாடுகள் இரண்டையும் நடைமுறைப்படுத்துக.

பாதிக்கப்பட்ட எல்லாத் தரப்பினருக்கும் உதவுதல் பாதுகாப்பு நல்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அதன் மனிதநேய நியமங்களை அளிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் முன்வந்துள்ளது.

இந்தச்சேவைகளை ஏற்பது குறித்து ஸ்ரீலங்கா அரசு சாதகமாக ஆலோசிக்கவேண்டுமென ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகள் கருத்தொருமித்த தீர்மானம் மூலம் அழைப்பு விடுத்துள்ளன.

இந்த அழைப்புக்கு ஸ்ரீலங்கா அரசு அமைந்து நடக்கவேண்டுமெனவும் குடியியல் உரிமைக்கான இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

1983 ஜூலை இனப்படுகொலைகளை, அதன் சேதங்களை மதிப்பீடு செய்யவந்த சாவதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இருவரை ஸ்ரீலங்கா அரசு நாடு கடத்தியதும் இராணுவ நடவடிக்கையின் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்ய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதும் தெரிந்தவையே. (இ-7)

## இறை அனுக்கிரகமின்றி தேவார திருவாசகத்துக்கு உரை எழுத முடியாது

யாழ்ப்பாணம், ஆக. 5

தேவார திருவாசகங்களுக்கு அநுபூதி பெற்றவர்களைத் தவிர ஏனையோரால் உரை எழுத முடியாது. எழுதினாலும் அது இலக்கிய நோக்கோடு இருக்குமேயல்லாமல் ஞான விளக்கமாக இருக்காது. நாயன்மார் அருளிய பாடல்களுக்கு விளக்கம் சொல்வதோ எழுதுவதோ மிக மிகக் கஷ்டம்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற "கந்தர் அநுபூதி" தொடர் சொற்பொழிவின் போது சொற்பொழிவாற்றி ஆத்மஜோதி நா. முத்தையா ஆசிரியர் மே

(4ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:

பற்றற்ற கண்ணும் பழைமைபாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

பொருள்:

ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுக்கும் தமக்கும் இருந்த பழைமையைப் பாராட்டிப் பேசும் பண்புகள் சுற்றத்தாரிடம் உண்டு.

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## ★ திருமுருகன் ★ திருவிழாக் காலம்

ஆறுமுகன் அருள் கொடுக்கும் காலம்
ஆசையோடு அடியார்க்குக்
கருணைதரும் காலம்
கூறுதிரு வீதிகளில் கோலம் செய்யும் காலம்
கூடிச் சிறுவர்கள் குதூகலிக்கும் காலம்
நீறுபொலி மேனியோடு
நேர்வணங்கும் காலம்
திருமுருகன் வீதிவரும் திருவிழாக்காலம்

வேலவனின் நினைவினிலே
குதூகலிக்கும் காலம்
முருகனின் நாமங்கள் உச்சரிக்கும் காலம்
'சரவணபவ' என்னும் மந்திரத்தின் காலம்
மாசற்ற மறையொலியாய்
நிற்கின்ற காலம்
மயில்மீது காட்சி கொடுத்து அருள்
புரியும் காலம்
அடங்காத ஆனந்தமாய் ஆடுகின்ற காலம்

— க. பொ. விஜயானந்தன்

* * *

## ★காண வாரீர்!★

ஆதி பரமேஸ்வரன் அழகு நுதல் விழியில்
சோதிமயமான சொரூபன் இளமுருகன்
மேதினியோர்க்கெலாம் வேண்டும் வரமருளும்
தீதிலா அருளாளன் செங்கை வடிவேலன்

ஆறுமுகன் தம்பி ஞானப்பழமேயவன்
கானக் குறவள்ளி காதல் மணவாளன்
கோலப்பவனிக் கொண்டாட்ட நன்னாளைக்
காணவருவீர் கந்தனுறை நல்லூரில்!

— க. நல்லதம்பி

## வித்தாரம்

என்ன முரளித்தம்பி! பத்துப் பன்ரெண்டு நாளைக்குப் பிறகு இண்டைக்குச் சந்திக்கிறோம் எண்டு நினைக்கிறேன்.

முக்கியமான நாட்களிலை நல்ல சங்கதியள் வரும். ஆனால், அப்பனைச் சந்திக்க நேரம் கிடைக்கிறது கொஞ்சம் அருமைதான். என்ன செய்ய, எங்கடை வேலையின் தன்மை அப்பிடியாப் போச்சு.

சரி போகட்டும். பாத்தியே, நிலைமையள் எப்பிடி எப்பிடி எல்லாம் திடீர் திடீர் எண்டு தலைகீழாய் மாறி இருக்குதெண்டு!

போன புதன்கிழமை ராஜீவும் - ஜே. ஆரும் சேர்ந்து கைச்சாத்திட்ட ஒப்பந்தம் ஒரு கிழமையுக்கையே பெரிய மாத்தங்களைக் கொண்டு வந்திட்டுது. உண்மைதான்.

நினைச்சும் பாக்காத அளவுக்கு மாத்தங்கள் வலு கெதியிலை வந்திட்டுது.

காலம் கலியுக காலம். எல்லாம் தலைகீழாய் மாறும். திடீர் எண்டு மாறும் எண்டு நான் உனக்கு அடிக்கடி சொன்ன விஷயம் ஞாபகத்திலை இருக்குமெண்டு நினைக்கிறேன்.

இப்ப அது நடந்திருக்குது பாக்கயில்லையே. ஷெல் அடி நிண்டு விட்டுது. ஹெலிச்சூடு நிண்டு விட்டுது. பொம்பரைக் கண்ணாலும் காண முடியயில்லை.

அதுகளுக்குப் பதில் கடும் பச்சைக் ஹெலியள் தென்னையளைத் தட்டுற அளவுக்குக் குறைஞ்ச உயரத்திலை அடிக்கடி பறந்து திரியுதுகள்.

ஸ்ரீலங்கா ராணுவத்தினர் களைப்பு வரும் வரைக்கும் அடிச்சு மோட்டோ ஷெல் ஏவுகருவிகள் எல்லாம் துணி போட்டு மூடிக்கட்டியாச்சாம். மூடிக்கட்டினால் பிறகும் பாவிக்கிற காலமும் வருமோ? அந்தச் சந்தேகத்துக்கு இடம் கொடுக்காமல் அதுகளை ஒரேயடியாய் கழட்டிக் கடலிலை போடவேணும்.

"ஒப்பறேஷன் லிபறேஷன்களை" நடத்திப் பிறகு "ஒப்பறேஷன் குட்வில்லை" நடத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டை முழுமையாய் பிடிக்கிறதுக்கு அச்சாணியார் கனக் கண்டார். எல்லாம் பகற்கனவாய், இப்ப பேய் அறைஞ்ச முகத்தோடை ஒரு சத்தமும் இல்லாமல் இருக்கிறார் பாவம். காலமும் ஒரு நாள் மாறும் எண்டது அவருக்குத்தான் மெத்தப் பொருத்தம் எண்டு சொல்லலாம்.

அவர் நினைச்ச "ஒப்பறேஷன் குட்வில்லை" இந்திய இராணுவம் வெகு கனகச்சிதமாய் செயலிலை காட்டி வருகுதாம். வடமராட்சிப் பக்கத்திலை இந்திய இராணுவம் மக்களோடை வெகு அன்னியோன்னியமாய் நடக்குதாம்.

எது எப்படி இருந்த போதிலும் இந்திய இராணுவம் வந்த பிறகு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகினம். பழைய வாழ்க்கை நிலைக்கு வந்து விட்டது போலை தங்களை அறியாமல் ஒரு நினைச்ச நிலையிலை இருக்கினம்...

யாழ்ப்பாணம் பெரிய கடைப் பக்கத்தைப் போய்ப் பாத்தால் அது விளங்கும். கடையளை எல்லாம் படபட எண்டு திறக்கினம்.

மூண்டு மாதத்துக்கு முன்னம் கடையளைப் பூட்டி, பெட்டி கட்டினவை இப்ப திரும்பவும் கடையளைக் கலகலப்பாக்குகினம்!

சரி அமைதி வந்திட்டுது. வழமையான வாழ்க்கை நிலைக்குப் போகலாம். எல்லாம் நல்லது தான். ஆனால் எங்கடை உரிமையள்...? அதுகளைப் பற்றி நினைச்சும் பாக்கிற மாதிரிச் சனம் இல்லை...! அதை நினைக்கத்தான் நெஞ்சு நோகுது...!

— கொளைமடாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★ தரமான வர்ண நிழற்பட பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்

பெற்றுக் கொள்ளலாம்.

# உதயன்

05 08 - 1987 புதன்கிழமை

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே
★ நெகடிவ் (Processing) செய்தல் இலவசம்
★ விற்பனை - வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# பல லட்சம் மக்கள் கலந்து கொண்ட

## வரலாறு காணாத கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 5

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்று சுதுமலையில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் சரித்திரம் காணாதவாறு, பல லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

திரு பிரபாகரன் வருவதற்காக ஒரு பாதை பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டு இருந்தது.

மேடைக்கு முன்னால் ஒதுக்கப்பட்ட விசேட ஆசனங்களில் ஏற்கனவே வந்திருந்த இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் அமர்ந்திருந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கும், மறைந்த பொதுமக்களுக்கும் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, கூட்டம் ஆரம்பமானது.


திரு யோகி முதன் முதலில் உரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து முறையே மன்னார்பிராந்திய தளபதி சாஜகான், மட்டக்களப்பு மாவட்டத் தளபதி கருணா, கிளிநொச்சி அரசியல் பிரிவு பொறுப்பாளர் மூர்த்தி, யாழ் மாவட்டத்தளபதி குமரப்பா, திருகோணமலைத் தளபதி புலேந்திரன், தளபதி கிட்டு ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் உரையாற்றினார்.



நேற்றைய புலிகளின் கூட்டத்தில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட இந்திய இராணுவ உயரதிகாரிகள். (படம்:- ஜெயம்)



புலிகள் பிரமுகர்கள் கிட்டு, யோகி, புலிகளின் யாழ் பிராந்தியத் தளபதி குமரப்பா ஆகியோர் உரையாற்றும் படம். (உ)
(படம்:- ஜெயம்)

# ஆயுதங்களை இந்தியாவிடம் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாது போனாலும் இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கியே தீருவோமென இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது.

இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை.

இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை மட்டும்தொட்டுநிற்கவில்லை. இது பிரதானமாக இந்திய - இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத்தின் கீழ் இலங்கையை கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியுள்ளன.

இலங்கையில அந்நிய நாசகாரசக்திகள் கால் ஊன்றாமல் தடுக்கவும் இது வழி வகுக்கின்றது. ஆகவே தான் இந்திய அரசு இந்த ஒப்பந்தத்தை செய்து கொள்வதில் அதீத அக்கறை காட்டியது.

ஆனால் அதே சமயம் ஈழத் தமிழரின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் அமைகிறது. ஆகவே தான் எமது மக்களை கலந்தாலோசிக்காமல், எமது கருத்துக்களை கேளாது இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம்.

### நாம் என்ன செய்வது?

ஆனால் நாம் ஆட்சேபித்ததில் அர்த்தம் இல்லை

எமது அரசியல் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும் பொழுது நாம் என்ன செய்வது?

இந்த ஒப்பந்தம் நேரடியாக எமது இயக்கத்தை பாதிக்கிறது; எமது அரசியல் இலட்சியத்தைப் பாதிக்கிறது; எமது போராட்ட வடிவத்தைப் பாதிக்கிறது; எமது ஆயுதப் போராட்டத்திற்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது

15 வருடங்களாக இரத்தம் சிந்தி, தியாகங்கள் புரிந்து, சாதனைகள் ஈட்டி, எத்தனையோ உயிர்ப்பலி கொடுத்து கட்டி எழுப்பப்பட்ட போராட்ட வடிவம் ஒரு சில தினங்களில் கலைக்கப்படுவதென்றால் அதை நாம்ஜீரணிக்கமுடியாமல் இருக்கின்றது. திடீரென கால அவகாசம் இன்றி— எமது போராளிகளின் ஒப்புதலின்றி — எமது மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமின்றி — இந்த ஒப்பந்தம் எம்மை நிராயுதபாணிகளாக்குகின்றது. ஆகவே நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தோம்

இந்தச் சூழ்நிலையில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் என்னை அழைத்துப் பேசினார். அவரிடம் எமது பிரச்சினைகளை மனந்திறந்து பேசினேன் சிங்கள இனவாத அரசில் எமக்குத் துளிகூட நம்பிக்கையில்லை என்பதையும் இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்சினை பற்றியும் அதற்கான உத்தரவாதம் பற்றியும் அவரிடம் பேசினேன்.

பாரதப் பிரதமர் எமக்குச் சில வாக்குறுதிகளை அளித்தார்; எமது மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தார்.

பாரதப் பிரதமரின் நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது; அவரது உறுதி மொழிகளில் நம்பிக்கை இருக்கின்றது.

சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன ஒழிப்பு நடவடிக்கையில் இறங்க இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகின்றோம். இந்த நம்பிக்கையில் தான் நாம் இந்திய சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.

நாம் எமது மக்களின் பாதுகாப்பிற்காக எத்தனை அளப்பரிய தியாகங்கள் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. எமது இலட்சியப் பற்றும் தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் அறிவீர்கள். உங்களது பாதுகாப்பிற்காக உங்களது விடுதலைக்காக உங்களது விமோசனத்திற்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கின்றோம்.

ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்து வந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்வது முதல் எமது மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தை தான் குறிக்கின்றது

நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை இந்தியாவை நாம் நேசிக்கின்றோம்.

இந்திய மக்களை நாம் நேசிக்கின்றோம். இந்திய வீரருக்கு எதிராக நாம் ஆயுதங்களை நீட்டத் தயாராக இல்லை எமது எதிரியிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதில் இருந்து ஈழத்தமிழர் ஒவ்வொருவரினதும் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் இந்திய அரசு தான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக் கூற விரும்புகின்றேன்.

இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம். ஆனால், இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் என நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கி விடும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன்.

### போராட்ட வடிவம் மாறலாம்

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், எமது போராட்ட இலட்சியம்மாறப்போவதில்லை. எமதுஇலட்சியம் வெற்றி பெறுவதானால் எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் நலன்கருதி இடைக்கால அரசில் பங்குபற்ற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்படலாம். ஆனால், நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை என்பதையும்: முதலமைச்சராக பதவியேற்கப் போவதில்லை என்பதையும் இங்கு உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன்:

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

இப்படி பிரபா கூறினார். (உ-ஓ-10-7)

# இறை - -

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கண்டவாறு கூறினார்.

திரு. நா. முத்தையா தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

இறைவனின் அனுக்கிரகத்தோடுதான் அநுபூதி பெறமுடியும். கந்தர் அநுபூதியைச் சிந்தையில் வைக்க வேண்டுமானால் இறைவனின் அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படி அவர் கூறினார் 'கந்தர் அநுபூதி' யில் உள்ள முதலாவது பாடலுக்கான விளக்கத்தை அவர் வழங்கினார்.

(இ-161)

# எம் இலட்சியத்துக்கு---

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

எடுத்தாலும் எமதுஇறுதி இலட்சியம் தமிழீழமே என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

எமது தலைவர் பல இக்கட்டான காலகட்டங்களில் கூட ஆயுதப் போராட்டம்மூலம்மட்டுமல்ல அஹிம்சை வழியில் கூட பல அழுத்தங்களை வென்றெடுத்தவர்.

சாகும் வரை உண்ணாவிரதம் இருந்ததன் மூலமாக அந்த அழுத்தத்தில் இருந்து எம்மையெல்லாம் மீட்டெடுத்து தமிழீழத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த அந்த தலைவர் இன்று இந்த முடிவை எடுத்திருக்கின்றார் என்றால்—


நிச்சயமாக நாங்கள் எல்லாரும் நம்பிக்கை கொள்ளலாம்.

இது தமிழீழத்திற்கான பயணத்தின் ஒரு பாதை அல்லது படிக்கட்டு என்று கொள்வதேயொழிய நாம் எமது பாதையில் இருந்து மாறுகின்றோம் அல்லது எமது பாதையை கைவிட்டு நாங்கள் வேறெங்கோ போய் கொண்டிருக்கின்றோம் என்பது அல்ல.

எனவே இதுவரை காலமும் எம்மை நம்பி எம்மோடு இறுதவரை உழைத்து எம்மை இந்த அளவுக்கு வளர்த்து விட்ட எமது மக்களைப் பார்த்துக் கேட்கிறோம். மீண்டும எங்களை நம்புங்கள்.

இறுதி வரை நாம் எமதுபாதையில் இருந்து தவறமாட்டோம் என உறுதி கூறுகின்றோம்.

– இப்படி கிட்டு கூறினார்.



விடுதலைப் புலிகளின் முன்னணி உறுப்பினர்கள் கிட்டு, மாத்தயா ஆகியோருடன் தலைவர் பிரபாகரன் மேடையில் அமர்ந்துள்ளார்.
விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். (படம்:- ஜெயம்)

## எம். ஜி. ஆரைச் சந்தித்தனர்

சென்னை, ஆக. 5

திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கி. வீரமணி, தமிழ்நாடு காமராஜா காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் ஆகியோர் நேற்று முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனைச் சந்தித்தனர். (இ-எ)

# டில்லி - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடந்த நிகழ்ச்சிகளைக் கோர்வையாக விளக்கினார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ஒப்பந்தம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை என்று எடுத்து சொல்லியபோதிலும் அவர்கள் தாம் செல்வதைக் கேட்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தனர் என்றார்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை

## அறிவித்தல்

சகல பாதுகாப்பு ஊழியர்களையும் இன்று தங்களது பழைய முறைமாற்றின்படி(SHIFT) தொழிற்சாலைக்கு சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

முகாரித்தரத்திற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் தொழிற்சாலை பிரதான வாசல் முன்றலில் முகாமையாளரைச் சந்திக்குமாறும் முகாமையாளரினால் வேண்டப்படுகின்றனர்

ஏனைய ஊழியர்கள் வேலைக்குச் சமுகமளிப்பது பற்றிய அறிவித்தல்கள் பின்னர் வழங்கப்படும்.

முகாமையாளர்
காங்கேசன் துறை
சிமெந்துத் தொழிற்சாலை.

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.

1. இயந்திர இயக்குனர்:
ஹைடில்பேர்க் இயந்திரம் இயக்குவதில் மூன்று வருட முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்,

2. அச்சுக்கோப்பாளர்கள்:
உரிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.

தபாற்பெட்டி இல: 100
மே/பா உதயன்
292 2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

ஆரம்பிக்கும்

வெளிவாரி

பட்டப்படிப்புக்கள்

கல்வியாண்டு 88/89

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப் படிப்புக்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் செப்டம்பர் 7 ஆம் திகதி

(07 09 87) ஆரம்பமாகின்றன

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், திருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ கலைமாணி (B. A)
★ வர்த்தகமாணி (B Com.)
★ விஞ்ஞானமாணி (B Sc) (கணிதம்)

விண்ணப்பங்கள் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர்" "அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்" என்ற பெயருக்கு ரூபா 10 ற்கான காசுக் கட்டளையுடன் 9"X11" அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும் விண்ணப்பப் படிவங்களை சனி, ஞாயிறு தினங்களில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர் -

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக் கருகாமையில்)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 05-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Wednesday August 05, 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org